# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மண்டலம்.
திருச்சிராப்பள்ளி.
திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் நகராட்சி, LNS கிராமம்

மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ந.ஊ.உ.இ.(திம) எண். 17/2018

---

ந.க.எண். 3616 /2018, திம2

நாள்:16.11.2018

1. 1) **மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு** "ம.வ/ந.ஊ.உ.இ (திம) எண். 17/2018" என எண்ணிடப்பட்ட வரைபடத்தின் படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

   2) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும்.

   3) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள், ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

   4) மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையை நிர்வாக அதிகாரிக்கு மனுதாரர் செலுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடம் இருந்து பெறும் வகையில் பத்திரத்தில் கையொப்பம் பெற வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைக அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலம் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

5. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக்கூடாது.

1) LTI சோனியப்பன்
2) பெ. லட்சுமி
3) N. செல்லம்மாள்
4) A. தமயந்தி
5) LTI செம்பாயி
6) T. [illegible]
7) LTI பானுமதி
8) S. K. லட்சுமி
9) N. kathi
10) R. சுப்ரமணியம்

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும், மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5அடி), 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்), 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 21 மீட்டர் (70 அடி) அகலத்திற்கும் உட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீட்டரும் (15 அடி). 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். தமிழ்நாடு மாநகராட்சி கட்டிட விதிகளின் படி/தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதியின் படி மனையின் எல்லைக்கு கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8மீட்டர் (6அடி)/2.4 மீ (8அடி) மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7. நகராட்சி பகுதியில்/பேரூராட்சி பகுதியில்/ஊராட்சி பகுதியில் அமையும் மனையின் பக்க எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் / 1 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் அகலமுடைய மனைகளுக்கு பக்க திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8. நகராட்சி பகுதியில்/பேரூராட்சி பகுதியில்/ஊராட்சி பகுதியில் அமையும் ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும், கட்டத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3.00 மீட்டர்/2.00 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி விடப்பட வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3.00 மீட்டர் முதல் 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9, விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்டவிதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது. கட்டடம் கட்டாமல் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ, தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ, துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப் பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் எடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் இரு புறமும் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர், மனைப்பிரிவிற்கு நகராட்சி ஆணையரிடமிருந்து / பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து / ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள

வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிடம் இருந்து கட்டட அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப் படவேண்டும்.

15. மனையின் ஊடே குறைந்த மின் அழுத்த / உயர் அழுத்த மின்கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வபைடத்தி காண்பித்து உள்ளவாரோ மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

16. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுந்து மூலமாக ஆணையர் / நிர்வாக அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டு. மனைப்பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

17. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மனைப்பிரிவு இடம் 1894 ஆம் ஆண்டு நிலம் கயகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)ன் படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் எந்தவொரு துறையிலிருந்தும் நில ஆர்ஜித பட்டியல் (Land Plan Schedule) மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்பது குறித்தும் நில சீர்திருத்தச் சட்ட 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்கிறது என்பது குறித்தும் ஆணையர் / நிர்வாக அதிகாரி மன நிறைவு அடைந்த பின்னரே தான், மனைப்பிரிற்கு நகராட்சி / பேரூராட்சி / ஊராட்சி மன்றத்தில் ஒப்புதலளித்து இறுதி அங்கீகாரம் வாங்கும்படி தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இ. மேற்படி மனைப்பிரிற்கு உள்ளாட்சியில் அளிக்கப்படும் இறுதி அங்கீகாரம் குறித்து நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

18. மனுதாரர் நகராட்சி ஆணையரிடமிருந்து / பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து / ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் தெளிவாக குறிப்பிட்ட அறிவுப்பு செய்ப்பட வேண்டும்.

19. மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்த பரிலிக்கப்படுகிறது. ஏனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட மடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

20. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:20.09.2002ல் தெரிவித்துள்ளபடி நிலஉரிமை குறித்து உள்ளாட்சியினரால் வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையிலேயே தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகின்றது. பல உரிமை குறித்து

வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்ள் சரியானவை அல்லது என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியயதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புன்றி ரத்து செய்யப்படும்.

21. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிலாள நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரரிக்கப்பட வேண்டும்.

22. இந்த உத்தேச மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் Local Body Standards–க்கு அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றினை சம்பந்தப்பட்ட MUNICIPAL ENGINEER–ரிடமிருந்து பெறப்பட்ட பின்னரே இந்த மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

***<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>***

| விவரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 0.55 | – |
| ஒதுக்கிய மொத்த மனைகள் | 7+1 | – |
| விற்பனைக்குரியவை கடை | 2362 ச.அடி | 14.73% |
| பொது ஒதுக்கீடு பூங்கா | இல்லை | – |
| குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான மனைகள் (EWS) | இல்லை | – |

**இணைப்பு:**

வரைபட நகல் – 3 எண்ணம்

நகர ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்
16/11/18

***<u>பெறுநர்:</u>***
நகராட்சி ஆணையர்,
கரூர்–1.

***<u>நகல்:</u>***
சோளியப்பன்,
த/பெ. லேட். ராமசாமி,
ஞ.வெள்ளாளபட்டி,
சணப்பிரட்டி,கரூர்.

Forwarded
7.12.2018
i/c **COMMISSIONER**
**Karur Municipality**

55

(43)

<u>கரூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்</u>
<u>முன்னிலை திரு.ம.செந்தில்முருகன், M.Com.,</u>

ந.க.எண்.6726/2018/எப்.1 — நாள்.07.12.2018

பொருள் : மனைப்பிரிவு – கரூர் நகராட்சி – எல்.என்.எஸ் கிராமம், புல எண்கள். 397/2, 398/3B & 4B- ல் 0.55 ஏக்கர் இடத்தினை மனைகளாக பிரிக்க மனைப்பிரிவு ம.வ (வ) / ந.ஊ.உ.இ (திம) எண்.17/2018 –க்கு இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு. S.சோளியப்பன் மற்றும் 10 நபர்கள் ஆகியோர்களின் விண்ணப்பம் நாள்: 09.07.2018
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.3616/2018/திம2, நாள்.23.08.2018
3. இந்நகர்மன்ற தீர்மான எண்.1093, நாள்.15.10.2018
4. சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர பதிவு ஆவண எண்.1–8332/2018, நாள்.24.10.2018
5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் கடித ந.க.எண்.3616/2018/திம2, நாள்.16.11.2018
6. இந்நகர்மன்ற தீர்மான எண்.1198, நாள்.30.11.2018

-----

<u>உத்திரவு:</u>

கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்.என்.எஸ் கிராமம் 397/2, 398/3B & 4B- ல் ஏக்கர் 0.55 பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதிகோரி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் பார்வை 2–ல் காணும் கடிதத்தின் வாயிலாக மனைப்பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைந்துள்ளதை தொடர்ந்து பார்வை 3–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1093, நாள்.15.10.2018–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதினை தொடர்ந்து பார்வை 4–ல் காணும் சார்பதிவலுவலக ஆவண எண்.1–8332/2018, நாள்.24.10.2018ல் பதிவு செய்து தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 5–ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர் திருச்சி அவர்களின் கடித ந.க.எண்.3616/2018/தி.ம.2, நாள்: 16.11.2018ல் மனைப்பிரிவுக்கு ம.வ (வ) / ந.ஊ.உ.இ(திம) எண்.17/2018 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்பேரில் பார்வை 6–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1198, நாள்.30.11.2018–ல்

1) LTI சோளியப்பன்
2) ம. லட்சுமி
3) N. செல்லம்மாள்
4) A. தமயந்தி
5) LTI வெம்பாயி
6) T. [illegible]
7) LTI பாலாமதி
8) S.K. லட்சுமி
9) N. Kanthi
10) R. சுப்ரமணியம்

மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதினை தொடர்ந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(ஒ/ம்) ம.செந்தில்முருகன்
ஆணையாளர்
கரூர் நகராட்சி

இணைப்பு:

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்

பெறுநர்:

திரு.சோளியப்பன் மற்றும் 10 நபர்கள்
விநாயகர் நகர்
எஸ்.வெள்ளாளப்பட்டி,
சணப்பிரட்டி கிராமம்,
கரூர்.

நகல்:

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கரூர்.
2. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருச்சி.
3. வருவாய் அலுவலர், கரூர் நகராட்சி.

7.12.2018.

// உண்மை நகல் உத்திரவுப்படி //

முதுநிலை நகரமைப்பு அலுவலர்
கரூர் நகராட்சி.

07.12.18

57

(45)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை

அனுப்புநர்
திரு.ம.செந்தில்முருகன், எம்.காம்.,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கரூர்– 639 001.

பெறுநர்
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
காஜாமலை மெயின் ரோடு,
காஜாமலை,
திருச்சிராப்பள்ளி–23.

ந.க.எண்.6726/2018/F1, நாள்.29.10.2018

ஐயா,

பொருள் மனைப்பிரிவு – கரூர் நகராட்சி – எல்.என்.எஸ். கிராமம் சர்வே எண்.397/2, 398/3B, 4B - 0.55 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – சம்மந்தமாக.

பார்வை : 1. திரு. R.சோளியப்பன் மற்றும் 10 நபர்கள் மனைப்பிரிவு விண்ணப்பம் நாள் 10.07.2018.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.23.07.2018
3.தங்களது அலுவலக கடித ந.க.எண்.3616/2018/திம2, நாள்.23.08.2018
4. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1093, நா..15.10.2018
5. நன்கொடை பத்திர பதிவு ஆவண எண். 8332/2018

------

பார்வை 1–ல் கண்டுள்ள விண்ணபத்தில் கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்.என்.எஸ்.கிராமம் சர்வே எண்.397/2, 398/3B, 4B - 0.55 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரிய திரு. R.சோளியப்பன் மற்றும் 10 நபர்கள் மனு பார்வை 2–ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் விண்ணப்பத்தினை பரிசீலிக்க அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை 3–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதத்தில் மனுதாரர் தார்சாலை, வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொண்டு சாலையை கரூர் நகர்மன்றத்திற்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மனைப்பிரிவு உரிமையாளர்கள் அடிப்படை வசதிகள் மேற்கொண்டும், தார்சாலை அமைத்தும், மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகளை ஒப்படைக்க தெரிவித்ததன் அடிப்படையில் பார்வை 4–ல் கண்ட இந்நகர்மன்ற தீர்மானத்தில் சாலையினை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை 5–ல் கண்ட நன்கொடை ஆவணம் மூலம் சாலைகளான இடத்தினை தானபத்திரம் மூலம் இந்நகராட்சிக்கு ஒப்படைத்துள்ளார். (நகல் இணைக்கப்பட்டுள்ளது). மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க தானபத்திர நகல் அனுப்பிவைக்கப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செந்தில் முருகன் 29/10/18
ஆணையாளர்
கரூர் நகராட்சி

29/10/18



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate